செய்தி வெளியீடு எண் :35 நாள் :25.07.2020

***தேனி மாவட்டம்***
***வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் சுய தொழில் தொடங்க மானியக் கடன் பெற விண்ணப்பிக்கலாம்***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல் :-***
******

தேனி மாவட்டத்தில், கிராம மற்றும் நகர்ப்புறங்களில் புதிய தொழில்களை உருவாக்குவதன் மூலம், சுயவேலைவாய்ப்பு, பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கத்தோடு, தமிழக அரசால் "வேலையில்லா இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்" (UYEGP)" அறிவிக்கப்பட்டு, மாவட்டத் தொழில் மையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி நிறுவனங்கள் துவங்க ரூ.10.00 இலட்சமும், சேவை நிறுவனங்கள் மற்றும் வியாபார நிறுவனங்கள் துவங்க ரூ.5.00 இலட்சமும் வங்கிக் கடன் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீட்டில் 25% மானியம், அதிகபட்சமாக ரூ.1.25 இலட்சம் மானியம் அரசு மாவட்ட தொழில் மையம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று, 18 வயது பூர்த்தி அடைந்து 45 வயது மிகாதவாரக இருத்தல் வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.5.00 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ், இந்த நிதியாண்டின் 2020-21 ஆண்டு கடன் திட்ட பயனாளிகளுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியில் இருந்து தமிழக அரசால் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதில் பயன்பெற ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் https://www.msmeonline.tn.gov.in/uyegp என்ற இணையதளத்தில் விண்ணப்பம் செய்து இத்திட்டத்தின் கீழ் மானியத்துடன் வங்கி கடனுதவி பெற்று தொழில் துவங்க முன்வருமாறும், மேலும் விபரங்களுக்கு பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், 9080078933 என்ற தொலைபேசியிலும் தொடர்பு கொண்டு பயனடையுமாறு தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ..ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், யேதன.**